**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.06/2026 In O.S.No.57/2016**

1. மாணிக்கம்
2. இளங்கோவன் ... மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள்

**//எதிராக//**

1. சிவபிரகாஷ்
2. ராதிகா
3. மாரியாயி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 10.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கலைச்செல்வன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்களுக்கு எதிராக 02.07.2025 ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல் நடத்த வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் 6 ம் பிரதிவாதி. 5 ம் பிரதிவாதிக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கை 5, 6 பிரதிவாதிகள் சார்பாக 7 ம் பிரதிவாதி கவனித்து வந்தார். அவர் தற்போது இறந்து விட்டார். இவ்வழக்கு விபரம் குறித்து மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது. இவ்வழக்கில் 5, 6 பிரதிவாதிகள் சார்பாக வாதி தரப்பு

சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் 02.07.2025 அன்று 5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக தோன்றாதரப்பினர்கள் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை ரத்து செய்யாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும். எனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>**

2) இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. வாதிகள் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டது உண்மையாகும். அசல் வழக்கு நிலுவையில் இருந்த போது 7ம் பிரதிவாதி இறந்து விட்டதாக சொல்வது உண்மையாகும். ஆனால் 5, 6 பிரதிவாதிகள் சார்பாகவும் 7ம் பிரதிவாதி வழக்கை நடத்தியதாக சொல்வது உண்மை அல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல. வா.சா.1 தனது முதல் சாட்சியத்தை 18.02.2020ம் தேதி தாக்கல் செய்த பின்னிட்டு பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்ததால் மேற்படி மனுவிற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு மீண்டும் 06.06.2025 அன்று வா.சா.1ன் முதல் சாட்சியம் எடுக்கப்பட்டது.

3) 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் பலமுறை வாய்தாக்கள் வழங்கப்பட்டிருந்தது. 02.07.2025 அன்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.2 விசாரிக்கப்பட்டு அவரையும் குறுக்கு விசாரணை செய்யாததால் விசாரணை முடிக்கப்பட்டது. பின்னிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தாக்கள் போடப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

5) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாததால் வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு விட்டது என்றும் தங்களுக்கு இவ்வழக்கில் நல்ல எதிர்வாதம் இருப்பதால் மீண்டும் மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இவ்வழக்கில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்னிட்டு 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்துள்ளனர். எனவே அவர்களுக்கு தங்கள் எதிர்வாதத்தை நிரூபிக்க மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவானது நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/−ஐ செலவுத்தொகையாக 17.03.2026 ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.03.2026

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

***********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 06/2026**
**in**
**O.S.No. 57/2016**

**DRAFT / FAIR ORDER**

**D.D.13.03.2026**

***********************************